வாரம் - 14 ஊக்கப் பாடல் எண் - 14

# திருக்குறள்

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரிவளங் குன்றிக் கால்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

- திருவள்ளுவர்

திருக்குறள் பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

எப்பொழுது வருவாய் ? எப்பொழுது தூங்குவாய் ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## எப்பொழுது வருவாய் ?

**நாளை வருவேன்.**

**நாளை பள்ளிக்கு வருவேன்.**

**நாளை நான் பள்ளிக்கு வருவேன்.**

## எப்பொழுது கடை திறக்கும் ?

**காலை 10 மணிக்குக் கடை திறக்கும்.**

## எப்பொழுது பேருந்து வரும் ?

**இன்னும் 5 நிமிடத்தில் பேருந்து வரும்.**

## எப்பொழுது உணவு கிடைக்கும் ?

**மதியம் ஒரு மணிக்கு உணவு கிடைக்கும்.**

**வேறு வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.**

**எப்பொழுது** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும். எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும் என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

# வாரம் - 14

## மாணவர் செயற்பாடு எண் - 1

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ண் ண எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ண் | ண | ண் | ண | ண் | ண |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 14

**மாணவர் செயற்பாடு எண் - 2**

**மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ண் ண எழுத்துகளை கீழே வட்டமிடவும் )


ணா ணெ ணோ ணே - எழுத்துகளில் உள்ள ன எழுத்தை வட்டமிட்டாலும் சரியே

# கண்ணோட்டம்

## நட்சத்திர திருமணங்கள்

நிறைய நட்சத்திரங்கள் திருமணங்கள் இந்த ஆண்டு நடந்தது.

சூர்யாவும் ஜோதிகாவும் நீண்ட காலம் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.



திருமணத்துக்கு பின் ஜோதிகா நடிப்புக்கு முழுக்கு போட்டார். லைலா மும்பை தொழில் அதிபர் மேடியை காதல் திருமணம் செய்தார். நடிகை உமா ஐதராபாத்தை சேர்ந்த துஷ்யந்தை மணந்தார். இவர் கம்ப்யூட்டர் என்ஜினீயர் ஆவார்.


பெங்களூரில் இவர்கள் திருமணம் நடந்தது.

விஜயகுமார் மகனும் நடிகருமான அருண் விஜய் சென்னையை சேர்ந்த ஆர்த்தியை மணந்தார்.



டைரக்டர் பாரதிராஜாவின் மகன் மனோஜும் நந்தனாவும் காதல் திருமணம்செய்துகொண்டனர். இவர்கள் திருமணம் பெற்றோர் சம்மதத்துடன் கோழிக்கோட்டில் நடந்தது. திருமண வரவேற்பு சென்னையில் நடைபெற்றது.

காயத்ரிரகுராம் அமெரிக்காவுக்கு படிக்க சென்ற இடத்தில் தீபக் என்பவர் காதல்வலையில் வீழ்ந்தார். தீபக் அங்கு கம்ப்யூட்டர் என்ஜினீயராக இருக்கிறார். இவர்கள் திருமணம் சென்னையில் நடந்தது.



டைரக்டர் செல்வராகவனும் சோனியா அகர்வாலும் காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் நீண்டகாலமாக காதலித்து வந்தனர். பெற்றோர் சம்மதத்துடன் சென்னையில் திருமணம் நடந்தது.

### திரை உலகில் பெண்கள்

இவ்வருட சாதனை பெண்கள்:- ப்ரியா.வி (இயக்குனர்) கண்ட நாள் முதல், ரேவதி எஸ்.வர்மா (இயக்குனர்) ஜூன். ஆர். பவதாரணி (இசையமைப் பாளர்) அமிர்தம், இலக்கணம், செந்தாமரை (நடன இயக்குனர்) கைவந்த கலை ஷோபா (கதை) நெஞ்சிருக்கும் வரை

### இரட்டை வேடம்

இம்சை அரசன்-23-ம் புலிகேசி, பேரரசு, நெஞ்சிலே, பச்சைக்குதிர, அரசு, வரலாறு (மூன்று வேடம்)

### மொத்த படங்கள்

1931 முதல் 2006 வரை வெளியான மொத்த பட... 6033 நேரடி படங்கள் - 4478 டப்பிங் படங்கள்-15...

# வாரம் - 14

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ....................................... **நிலை**........... **நாள்**...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

### நினைவூட்டல் -

**சக் பத் பத நக பந் நட நத நத் சந**

**கந வச வட வத மத தட தவ பத**

**ய்ய கய கய் நர கர வர சர டர்**

**ல்ல லல் கல நல வல லட் லர்**

**ன்ன வன மன சன் பன பன்**



# வாரம் - 14

## வீட்டு வேலை எண் - 1

**மாணவர் பெயர் .................................... நிலை........... நாள்...............**

# ய் ய, ர ர், ல ல், ன் ன, ண் ண

(பத்து எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

# கண்ணோட்டம்

## நட்சத்திர திருமணங்கள்


நிறைய நட்சத்திரங்கள் திருமணங்கள் இந்த ஆண்டு நடந்தது.

சூர்யாவும் ஜோதிகாவும் நீண்ட காலம் காதலித்து திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்துக்கு பின் ஜோதிகா நடிப்புக்கு முழுக்கு போட்டார். லைலா மும்பை தொழில் அதிபர் மேடியை காதல் திருமணம் செய்தார். நடிகை உமா ஐதராபாத்தை சேர்ந்த துஷ்யந்தை மணந்தார். இவர் கம்ப்யூட்டர் என்ஜினீயர் ஆவார்.

பெங்களூரில் இவர்கள் திருமணம் நடந்தது.

விஜயகுமார் மகனும் நடிகருமான அருண் விஜய் சென்னையை சேர்ந்த ஆர்த்தியை மணந்தார்.




டைரக்டர் பாரதிராஜாவின் மகன் மனோஜும் நந்தனாவும் காதல் திருமணம்செய்துகொண்டனர். இவர்கள் திருமணம் பெற்றோர் சம்மதத்துடன் கோழிக்கோட்டில் நடந்தது. திருமண வரவேற்பு சென்னையில் நடைபெற்றது.



காயத்ரிரகுராம் அமெரிக்காவுக்கு படிக்க சென்ற இடத்தில் தீபக் என்பவர் காதல்வலையில் வீழ்ந்தார். தீபக் அங்கு கம்ப்யூட்டர் என்ஜினீயராக இருக்கிறார். இவர்கள் திருமணம் சென்னையில் நடந்தது.

டைரக்டர் செல்வராகவனும் சோனியா அகர்வாலும் காதல் திருமணம் செய்து கொண்டனர். இவர்கள் நீண்டகாலமாக காதலித்து வந்தனர். பெற்றோர் சம்மதத்துடன் சென்னையில் திருமணம் நடந்தது.



## திரை உலகில் பெண்கள்

இவ்வருட சாதனை பெண்கள்:- ப்ரியா.வி (இயக்குனர்) கண்ட நாள் முதல், ரேவதி எஸ்.வர்மா (இயக்குனர்) ஜூன். ஆர். பவதாரணி (இசையமைப் பாளர்) அமிர்தம், இலக்கணம், செந்தாமரை (நடன இயக்குனர்) கைவந்த கலை. ஷோபா (கதை) நெஞ்சிருக்கும் வரை

## இரட்டை வேடம்

இம்சை அரசன்–23–ம் புலிகேசி, பேரரசு, நெஞ்சிலே, பச்சைக்குதிர, அரசு, வரலாறு (மூன்று வேடம்)

## மொத்த படங்கள்

1931 முதல் 2006 வரை வெளியான மொத்த பட

6033 நேரடி படங்கள் – 4478 டப்பிங் படங்கள்–15

# வாரம் - 14

## வீட்டு வேலை எண் - 2

**மாணவர் பெயர் ..................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )

(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| ல் ல | ன் ன | ண் | ண | ண் | ண |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |